ரியல் செக்யூரிட்டி சர்வீஸ்
செல்: 99406 15560, 94424 10009

மீடியா செய்தி
MEDIA SEITHI
தமிழ் நாளிதழ்
RNI NO : TN TAM/2016/73491
தன்னம்பிக்கையின் அடையாளம்
mediaseithi@gmail.com

ரெயின்போ தலையணை

மலர் – 10 இதழ் – 148 சென்னை 05.03.2026 வியாழக்கிழமை ஆண்டு சந்தா 1800/– பக்கம் – 4 விலை ரூ. 5.00

# பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கு




பெரியபாளையம்,மார்ச்5

பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டு பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. டெக்ஸாரா 2ரி26,ஸ்பார்க்ஸ் 2ரி26, அட்யூன் 2ரி26, மெகாட்ரான் 2ரி26 எனும் நான்கு முக்கிய தொழில்நுட்ப நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இந்த தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கு நிகழ்ச்சி அமைந்திருந்தது. இந்நிகழ்ச்சியில்,தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 600 க்கும் மேற்பட்ட பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டு

தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.இதில், சிஎஸ்இ,செயற்கைநுண்ணறிவு மற்றும் டி.எஸ்,செயற்கை நுண்ணறிவு மற்றும் எம்.எல்,சைபர் பாதுகாப்பு,சி.எஸ்.பி.எஸ்,இசிஇ,இஇஇ,இயந்திர பொறியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துதல்,புதுமைத்திறனை ஊக்குவித்தல் மற்றும் கல்லூரிகளுக்கிடையேயான ஒத்துழைப்பை வளர்த்தல் ஆகியவை இந்நிகழ்வின் நோக்கமாகும்.தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி, குத்துவிளக்குஏற்றுதல் மற்றும் கருத்தரங்கடீசர் வெளியீடு ஆகியவற்றுடன் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,கல்லூரியின் நிறுவனத்தலைவர் டாக்டர் ஆர்.நாராயணசாமி தலைமை தாங்கிபேசினார். கல்லூரியின் முதல்வர் டாக்டர் பி.ஆர்.ரமேஷ் பாபு முன்னிலை வகித்து தொழில்நுட்ப கருத்தரங்குகள் மாணவர்களின் நடைமுறை அறிவு,தலைமையியல் திறன் மற்றும் படைப்பாற்றலை மேம்படுத்தும் முக்கியத்துவம் குறித்துஎடுத்துக்கூறிபேசினார்.

இந்நிகழ்ச்சியில்,தலைமை விருந்தினராகஎக்ஸ்ட்ராக்டல் இயக்குனர் பிரேம் ஆனந்த் கலந்துகொண்டு, உருவெடுத்து வரும் தொழில்நுட்பங்கள்,டிஜிட்டல் மாற்றம்,புதுமை மற்றும் தொழில் தயார் நிலை குறித்து மாணவர்களுக்குஎடுத்துக்கூறி சிறப்புரையாற்றிபேசினார். இறுதியாண்டு மாணவர் பிரதிநிதிகள் தங்களது துறைகளின் நிகழ்வுகளை அறிமுகப்படுத்தினர். கருத்தரங்கபொறுப்பாளராக கணினி அறிவியல் துறை தலைவர் டாக்டர் பி.மகேஷ் செயல்பட்டார்.

எஸ்.பிரவீனா கருத்தரங்கு நிகழ்ச்சிக்குஒருங்கிணைப்பாளராக செயல்பட்டுஇந்நிகழ்ச்சியை சிறப்பாகநடத்தி முடித்தார்.